| | | |
|---|---|---|
| **அ.வ.எண்** | **:** | **276/2012** |
| **தேதி** | **:** | **03.03.2025** |
| **பெயர்** | **:** | ராமதாஸ் (எ) தாசன் த/பெ. ஐயப்பன் |

வா.த.சா.1. /(PW1) திரு. ராமதாஸ் (எ) தாசன் த/பெ. ஐயப்பன் என்பவருக்கு இந்நீதிமன்றத்தால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.த.சா.1 (PW1) - குறுக்கு விசாரணை**

1) நான் இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய இடத்தில் வாட்டர் டேங்க் கட்டுவதற்காக பஞ்சாயத்தில் இருந்து ஆட்கள் அனுப்பியிருந்தார்கள். அதை தடுப்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாவா சொத்தை யாரிடம் இருந்து வாங்கினேன் என்றால் நூர்ஜகான் என்பவரிடம் இருந்து வாங்கினேன். தாவா சொத்தை நூர்ஜகான் யாரிடம் இருந்து வாங்கினார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது.

2) தாவா சொத்து பிருந்தாவன் நகர் மனைப்பிரிவில் உள்ளது என்றால் சரிதான். நான் தாவா சொத்தை கிரயம் வாங்கியபோது பிருந்தாவன் நகர் மனைப்பிரிவு செய்யப்பட்ட பின்னர் தான் கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் தாவா சொத்தை வாங்கும்போது பிருந்தாவன் நகர் மனைப்பிரிவு வரைபடத்தை வாங்கினேன் என்றால் சரிதான். பிருந்தாவன் நகர் மனைப்பிரிவு 1984 ம் ஆண்டு Approval பெறப்பட்டது என்றால் சரியல்ல. அது Unapproved மனைப்பிரிவு ஆகும்.

3) பிருந்தாவன் நகர் மனைப்பிரிவு வரைபடத்தில் பூங்கா என்று காட்டப்பட்ட சொத்தை தான் நான் வாங்கினேன் என்றால் இல்லை. இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதில் உரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் தாவா சொத்து பூங்கா என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது குறித்து எந்த விவரமும் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியின் ஆட்கள் தாவா சொத்திற்கு வந்தபோது நான் ஏன் இங்கு வந்தீர்கள் என்று கேட்டேனா என்றால் கேட்டேன். எனது சொத்தில் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டேன். அவர்கள் வாட்டர் டேங்க் கட்ட போகிறோம் என்று சொன்னார்கள். மேற்படி 2ம் பிரதவாதியின் ஆட்கள் இந்த இடம் பஞ்சாயத்திற்கு சொந்தமான பூங்கா இடம் என்று கூறினார்களா என்றால் இல்லை.

4) தாவா சொத்தை என்னிடம் விற்றநபரிடம் 2ம் பிரதிவாதியின் ஆட்கள்

வாட்டர் டேங்க் கட்ட வருகிறார்கள் என்று குறிப்பிட்டு கேட்டேனா என்றால் நான் தாவா சொத்தை வாங்கும்போது அவர் வயதானவராக இருந்தார். அவர் தற்போது எங்கு இருக்கிறார் என்று தெரியவில்லை. தாவா சொத்தை என்னிடம் விற்றவர் மீது நான் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கிற்கு பின்னர் தாவா சொத்து சம்பந்தப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை பார்த்து தாவா சொத்து பூங்காவில் தான் உள்ளதா என்று பார்த்தேனா என்றால் இல்லை.

5) இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 2ம் பிரதிவாதி மீதோ, அவரது ஆட்கள் மீதோ காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தான் தாக்கல் செய்தேன். எனது பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யக்கூறி பேரூராட்சியில் இருந்து மனு கொடுத்ததன் பேரில் எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. பிருந்தாவன் நகர் மனைப்பிரிவை ஏற்படுத்திய ரகோத்தம்மன் என்பவர் பொது பயன்பாட்டிற்கு என்று விடப்பட்ட இடத்தை யாருக்கும் அனுமதி இல்லாமல் மாற்றம் செய்யமாட்டேன் என்று உறுதி மொழி பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது குறித்து தெரியாது.

6) மேற்படி ரகோத்தம்மன் எழுதி கொடுத்த உறுதி மொழி பத்திரத்தை 2ம் பிரதிவாதி ஆவணமாக தாக்கல் செய்துள்ளார் மேற்படி ஆவணத்தை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. அது நான் அப்படி எதுவும் எழுதி கொடுக்கவில்லை. பிருந்தாவன் நகர் மனைப்பிரிவை ஏற்படுத்திய ரகோத்தம்மன் தாவா சொத்தை பூங்காவிற்காகவும் பொது பயன்பாட்டிற்காகவும் தான் கொடுப்பபேன் என்று உறுதி மொழி பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் அதன் பின்னர் தாவா சொத்தை விற்கவோ மாற்றம் செய்யவோ அவருக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

7) மனைப்பிரிவில் உள்ள மற்ற மனைகளை விற்கும்போது இந்த மனைப்பிரிவில் பொது பயன்பாட்டிற்காக பூங்கா உள்ளது என்பதை காட்டி தான் விற்றார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அப்படி என்னிடம் எதையும் காட்டவில்லை. மனைப்பிரிவை ஏற்படுத்திய ரகோத்தம்மன் அந்த மனைப்பிரிவில் உள்ள மற்ற மனைகளை விற்கும்போது இந்த மனைப்பிரிவில் பொது பயன்பாட்டிற்காக பூங்கா உள்ளது என்பதை காட்டி தான் விற்றார் என்றாலும் தற்போது அவரால் எந்த மாற்றமும் செய்ய இயலாது என்றாலும் சரியல்ல.

8) ரகோத்தம்மன் மற்றும் எனக்கு தாவா சொத்தை விற்ற நூர்ஜகானுக்கும் எனக்கும் தாவா சொத்தானது பூங்காவுக்காக ஒதுக்கப்பட்ட இடம் என தெரிந்து தான் வாங்கினேன் என்றால் சரியல்ல. நான் மனையை தான் வாங்கினே். நான் எனது வழக்குரையில் பூங்காவுக்கு என

ஒதுக்கப்பட்டதாக கொடுக்கப்பட்ட தாவா சொத்தில் எந்த தான பத்திரமும் எழுதி கொடுக்கப்படவில்லை என குறிப்பிட்டுள்ளேன், ஆனால் மனைப்பிரிவி எழுதி கொடுத்த ரகோத்தம்மன் உறுதி மொழி பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் அதற்கு மாற்றாக தாவா சொத்தை மாற்றி எழுத யாருக்கும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு சொந்தமானதா அல்லது பஞ்சாயத்திற்கு சொந்தமானதா என்பது தான் பிரச்சனை என்றால் சரிதான்.

9) தாவா சொத்து எனக்கு சொந்தமானது என்று விளம்புகை செய்யக்கோரி நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு தான் சொந்தமானது என்பதால் நான் எந்த விளம்புகை கேட்கவில்லை. பிரதிவாதிகள் என்னை எந்த தொந்தரவும் செய்யக்கூடாது என்று கோரியுள்ளேன். வழக்கு தாக்கல் செய்யும் முன்பே தாவா சொத்து எனக்கு சொந்தமானதா அல்லது பஞ்சாயத்திற்கு சொந்தமானதா என்பது தான் பிரச்சனை எனவே வழக்கு சொத்து எனக்கு சொந்தமானது என்று விளம்புகை செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்திருக்வேண்டும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Typewritten by the Typist Open Court to my dictation and to my hearing read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/. I. Vino,
District Munsif,
Sriperumbudur.